2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்காலி ஊராட்சி அருகில் உள்ள மேலரசன்பட்டு ஆற்றின்மேல் புதிய பாலம் ஒன்று கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட அளவில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் பாலங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. வெள்ளம் காரணமாக இந்தப் பாலம் அடித்துச் செல்லப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

347—

வேலைவாய்ப்பு அலுவலகம்

***43445—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, அரூரில் தனியாக துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் கல்வியறிவிலே பின்தங்கிய மாவட்டமாகும். அங்கு கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 64.71 சதவிகிதம் ஆகும். குறிப்பாக, அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் இருக்கக்கூடிய இளைஞர்கள் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், சித்தேரியிலிருந்து அரூர் வந்து, அரூரிலிருந்து தருமபுரி செல்ல வேண்டும். ஒரு நாள் முழுவதும் செலவழிக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது.

கடந்த காலங்களில், கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் பகுதிகளில் துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் பதிவு செய்யப்பட்டு வந்தன. சமீபத்தில் on-line மூலமாக வேலைவாய்ப்பு பதிவு செய்யும் முறை வந்த பிறகு, ஒரு மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்று மாறியிருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய பெரியகல்வராயன், சின்னகல்வராயன் மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய இளைஞர்களெல்லாம் படித்தவர்கள். இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கும், வேலைவாய்ப்பு தேடுவதற்கும் வசதியாக இருக்கும் என்ற அடிப்படையிலே, அரூரில் ஒரு புதிய துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை ஏற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிப்பார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதியைப் பொறுத்தமட்டில், துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் பல பகுதிகளிலே செயல்பட்டு வந்தன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், on-line வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், அத்தகைய துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு, மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்கிற வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, ஆதி

2014 ஆகஸ்ட் 6]

திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக பயிற்றுவிப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களை திருநெல்வேலி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் வேலூர் பகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலேயும் அப்படிப்பட்ட மையத்தை அமைத்து, மலைவாழ் மக்களுக்குப் பயன்படுகிறவகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக இதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதிகள் மற்றும் இளைஞர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் நடமாடும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பு செயல்பட்டு வந்தன. அதைப்போல நடமாடும் வேலைவாய்ப்பு அலுவலகம் கொண்டு வருவதற்கான கருத்துரு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே வேலை கேட்டு இதுவரை பதிவு செய்தவர்களின் விவரத்தையும், குறிப்பாக, எனது தருமபுரி மாவட்டத்தில் இதுவரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்கள் எத்தனை பேர் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதையும் 10-வது, 12-வது மற்றும்* degree *படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு நிவாரணமாக*-stipend...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, ஒரு கேள்வி கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பதில் வரும். நீங்கள் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனால் எப்படிப் பதில் வரும்?*

திரு. ப. டில்லி பாபு: *மாணவர்களுக்கு* stipend *வழங்கப்பட்டு வந்தது. இப்போதும்* stipend *வழங்கப்பட்டு வருகிறதா? எத்தனை மாணவர்களுக்கு* stipend *வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மொத்தம் 94,58,161 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். அதில், தருமபுரி மாவட்டத்திலே மட்டும் 2,12,930 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் தருமபுரியில் 31,471 பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 23-7-2014-ல் 5 புதிய வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலே, தருமபுரி மாவட்டத்திற்கும் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகள் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 348, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

348—

மகளிர் விடுதிகள்

***22527—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மற்றும் தேவக்கோட்டையில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?